# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case NoDVC.No. 6/2023 PW– 1

Name : முருகேஸ்வரி (புகார்தாரர்)

Father's/Husband's Name : பாலகிருஷ்ணன்

Village : வலையபட்டி, அழகர்கோவில்

Taluk : மேலூர்

District : மதுரை

Age : 24 /2023

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22 day of September 2023

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11:31 A.M. – 11. 42A.M.

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். 2வது மனுதாரர் எனது மகனாவார். நான் இவ்வழக்கை என் கணவருக்கு எதிராக குடும்ப வன்முறை செய்ததற்காக தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மனுதாரர்கள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

ம.சா.ஆ.1 – 02.07.2020 தேதியிட்ட திருமண பத்திரிக்கை – அசல்.

ம.சா.ஆ.2 – 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

ம.சா.ஆ.3 – குடும்ப அட்டை– நகல்

ம.சா.ஆ.4 – 08.10.2021 தேதியிட்ட 2வது மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – சான்றிட்ட நகல்.

ம.சா.ஆ.5 – 12.11.2022 தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரர் மீது திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட புகார் ஏற்பு சான்றிதழ்– அசல்.

ம.சா.ஆ.6 – 20.09.2023 தேதியிட்ட திண்டுக்கல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள அமர்வு வழக்கு எண். 90/2023 வழக்கின் B–Diary – இணைய நகல்.

ம.சா.ஆ.7 – 22.06.2023 தேதியிட்ட மனுதாரர், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் திண்டுக்கல் ஊரக அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு அனுப்பிய புகார் மனு – கைநகல்.

மேற்கண்ட ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ–7 வரையிலான சான்றவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு சான்றவணங்களாக ஏற்றுக் கொண்டு மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இவ்வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்